பொழுது முன்பு கலம் 50 ரூபாய் விற்ற நெல் இப்பொழுது 60 ரூபாய்க்கு விற்கிறது. ஆகவே, உயர்ந்துகொண்டிருக்கும் விலையைத் தடுக்க இனி மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கையெடுத்து தஞ்சாவூரிலிருந்து 5,000 டன்களுக்கு மேல் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. எப்பொழுதுமே அறுவடைக்கு முன்னால் விலை கொஞ்சம் ஏறும். அதுபோலத்தான் ஏறியிருக்கிறது. சென்ற திங்களை விட இப்பொழுது ஐந்து ரூபாய் குறைந்திருப்பதாக நேற்றுவரை தகவல் இருக்கிறது. நாங்கள் எடுத்த நடவடிக்கைகளின் மூலம் வெகு விரைவில் குறையலாம் என்று நம்புகிறேன்.

3. அறிக்கை அளித்தல்

அரசினர் உறுதிமொழிக்குழுவின் ஆறும் அறிக்கை

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, அரசினர் உறுதி மொழிக் குழுவின் ஆறும் அறிக்கையை (ஐந்தாம் சட்டப் பேரவை) அளிக்கிறேன்.

4. நடைமுறைக் கேள்வி

பேரவைத் தலைவர் மீது கொடுக்கப்பட்ட உரிமைப்பிரச்சினை அறிவிக்கை குறித்து தகவல் கோரல்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், இன்று காலையிலே மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் மீது ஒரு பிரிவிலெஜ் மோஷனை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இந்த அவைக்குப் புறப்படும் நேரத்தில் மாண்புமிகு தங்கமணி என்று நினைக்கிறேன், என்னுடைய அறைக்கு வந்து கொடுத்திருக்கிறார்கள். அவைக்கு வந்ததற்குப் பிறகு சில உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பார்க்கக் கூட நேரமில்லை. என்ன கொடுத்திருக்கிறார்கள், அது அனுமதிக்கப்படக் கூடியது தானா, பிரிவிலெஜா என்று கூடப் பார்க்கவில்லை. கொடுத்திருக்கிறார்கள், ஆனால் அதற்காக பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பி, அது என்ன ஆயிற்று என்று கேட்பது முறையல்ல.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நானும் திரு. தங்கமணி அவர்களும் கொடுத்திருக்கிறோம். அதைப் பற்றித் தலைவரவர்கள் என்ன சொல்கிறார்கள். நேற்று நடந்ததைப்பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவைக்குப் புறப்படும் நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கே வந்ததற்குப் பிறகு சிலபேர் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன என்று பார்க்கக்கூட நேரமில்லை.